## எதிர்கால நிகழ்வுகள் »»»

கர்த்தராகிய தேவனுடைய வருகைக்காக அவருடைய சபை மணவாட்டியைப்போல காத்திருக்கிறது, ஆயத்தப்படுகிறது; எல்லா மனுஷருக்கும் சரீர உயிர்த்தெழுதல் உண்டு; கர்த்தருக்குள் மரித்தவர்கள் நித்தியஜீவனை அடையும்படி முதலாம் உயிர்த்தெழுதலிலேயும், “கர்த்தரே தேவன்” என்று ஏற்றுக்கொள்ளாத அவிசுவாசிகள் நித்திய அழிவாகிய நியாயத்தீர்ப்பை அடையும்படி இரண்டாம் உயிர்த்தெழுதலிலேயும் எழும்புவார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை அவருக்கு காத்திருக்கிறவர்கள் இரட்சிப்படையவும், அவரை விசுவாசியாதவர்கள் நியாயத்தீர்ப்படைவதற்கு ஏதுவாயும் இருக்கிறது.

“மணவாட்டி” மற்றும் “மணவாளன்” என்கிற உவமையின் கருத்தை அறிவது அவசியம்!

ஏசாயா 54:5a உன் சிருஷ்டிகரே உன் நாயகர்.

## தேவசபை »»»

தேவசபை என்பது உவமையாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது; கிறிஸ்துவே சபைக்கு தலையாயிருக்கிறார்! இரட்சிப்படையும்படி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசம் வைத்தவர்கள், அவருடைய ஆவியினால் மறுபடியும் பிறந்து அவருடைய சரீரமாகிய சபைக்குள் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறார்கள்.

“கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்” சங்கீதம் 1:2

### குறிப்பு

- வேதாகமத்திலுள்ள வேதவார்த்தைகளின் உட்கருத்துக்களை அறிந்து கொள்ள ஆர்வமாய் இருக்கிறீர்களா ?
- வேதாகமத்திலுள்ள உங்கள் சந்தேகங்களுக்கு பதில் கிடைக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா ?
- உங்களுடைய ஜெப விண்ணப்பங்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா ?

### JOIN WITH US

www.fgministries.in
fgministries
flockofgod
fg_ministries
flockofgodministries

God Bless You




தொடர்புக்கு

Pastor. Rajkumar
0091 9962789811
info@fgministries.in


# FLOCK OF GOD MINISTRIES
# தேவனின் மந்தை ஊழியங்கள்

**“கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்; நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்”**

**சங்கீதம் 100:3**



# சபை நம்பிக்கையும் அறிக்கையும்

பரிசுத்த வேதாகமம் தேவஆவியால் ஏவப்பட்டு தேவமனிதர்களால் எழுதப்பட்ட பரிபூரண சத்தியமுள்ளது; இது மனிதனின் ஆத்துமா இரட்சிக்கப்படுவதற்கு அவனை கிறிஸ்துவை நோக்கி நடத்துகிறது; இது உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது; எல்லாவற்றிற்கும்மேலாக இதுவே உறுதியும் இறுதியுமான அதிகாரம் பெற்றது.

“தேவனின் மந்தை ஊழியங்கள்”, இயேசுவே கிறிஸ்து என்றும், கிறிஸ்து இயேசுவே கர்த்தரென்றும், கர்த்தரே தேவனென்றும், தேவன் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் வேதவாக்கியங்களின்படி விசுவாசிக்கிற, போதிக்கிற, அறிவிக்கிற சபையாகும்.

## தேவன்

பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு; இவரே நம் சிருஷ்டிகர், இவர் அதரிசனமானவர், இவர் ஆவியாயிருக்கிறவர். ஆனால் இந்த தேவன் மாம்சத்தில் மனிதனாக வெளிப்பட்டார் என்கிற சத்தியம் மகாமேன்மையான தேவபக்திக்குரிய இரகசியம் என்று வேதம் அறிவிக்கிறது. இந்த சத்தியத்தை ஏற்றுக்கொண்டு விசுவாசிப்பதே சுவிசேஷத்தை விசுவாசிப்பதாகும்!

## கர்த்தர்

“இயேசுகிறிஸ்து” என்னும் ஒரே கர்த்தர் நமக்குண்டு; இவர் அதரிசனமான ஒரே தேவனுடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமானவர்; ஒன்றான மெய்தேவன் தாம் உண்டாக்கின மனுஷரை மீட்டு இரட்சிப்பதற்கான பாவநிவாரணபலியை ஏற்படுத்தும்படி தமக்கு ஒரு சரீரத்தை ஆயத்தப்படுத்தினார்! இதற்காக அவர் பரிசுத்தஆவியால் கன்னி மரியாளிடத்தில் உற்பவித்து மனிதனாக பிறந்து மாம்சத்திலே காணப்பட்டபடியால், “தேவனுடைய குமாரன்” எனப்பட்டார்.

தேவனுடைய இந்த சரீரமானது, மனுக்குலத்தின் பாவம் அக்கிரமம் மீறுதலுக்காக சிலுவையில் அறையப்பட்டு, இரத்தம் சிந்தி, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, உயிரோடிருக்கிறவராய் தன்னை காண்பித்து தம்முடைய அப்போஸ்தலர்களால் உலகத்தில் பிரசங்கிக்கப்பட்டார். வேதாகமம் இவரையே கிறிஸ்து என்றும்; இந்த இயேசுகிறிஸ்துவையே கர்த்தர் என்றும்; இந்த கர்த்தர் ஒருவரேயே தேவன் என்றும்; தேவன் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் வலியுறுத்துகிறது.

**…தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்…**

1 தீமோத்தேயு 3:16A

## பரிசுத்த ஆவி

பரிசுத்தஆவி என்கிற வார்த்தை, “தேவன்” ஆவியாயிருக்கிறபடியால் அவரை குறிக்கிற வார்த்தை; தேவன் தம்மையும், தாம் ஏற்படுத்தின வழியையும் விசுவாசிக்கிறவர்களை தமது ஆவியால் முத்திரையிட்டு, விசுவாசிக்கிறவர்களுக்குள் வாசமாயிருக்கிறார். “கர்த்தரே ஆவியானவர்” என்று பரிசுத்த வேதாகமம் அறிவிக்கிறது.

## இரட்சிப்பு

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் மனிதனுடைய சகல பாவங்களையும் நீக்கி அவனை சுத்திகரிக்கிறதற்காய் சிந்தப்பட்டது. அவருடைய நாமத்தின் மேல் வைக்கிற விசுவாசமே எந்த மனுஷரையும் நீதிமான்களாக்கி இரட்சிக்கிறது; இது தேவனுடைய சுத்த கிருபையும் அவரால் உண்டாகிற ஈவுமாய் இருக்கிறது; அவருடைய ஆவியினால் மறுபடியும் பிறந்த அவருடைய பிள்ளைகளாய் மாற்றுகிறது.

**…. FG Ministries**